அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15–5–2012) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. சென்னையிலுள்ள திருவாளர்கள் அரசு மருந்தக டெப்போ நிறுவனத்தால் மத்திய அரசு மருத்துவமனைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்கள் தொடர்பான மொத்த வியாபாரத் தொகை குறித்து செலுத்தத்தக்க வரி நிலுவைத் தொகையினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி1) துறையின் 16–11–2011 ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணை(2டி)-யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

69. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

70. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

266. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

267. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

268. மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

269. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)